DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாலதி | Father/Husband Name : சீனிவாசன் |
| Age : 55 | Village : வெற்றிலையூரணி |
| Taluk : | Calling : பயர் ஆபிசில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 4, 2025 4:03 PM

(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் வெற்றிலையூரணியில் குடியிருந்து பயர் ஆபிசில் வேலை செய்து வருகிறேன்

2. இவ்வழக்கின் எதிரி பால்பாண்டியை எனக்கு தெரியும் அவர் எனது ஊர்க்காரர். கடந்த 18.07.2019 ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனது மகன் சிவா, மருமகன் கண்ணன் எனது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் எனது அம்மாவை சிவகாசியில் உள்ள சேட் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றிருந்தார்கள். அன்று இரவு 11.00 மணியளவில் நான் வீட்டிற்கு வெளியே நின்று போனில் பேசிக்கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி பால்பாண்டி குடிபோதையில் வந்து எனது கையை பிடித்து இழுத்து காசு கொடுக்கிறேன் என்கூட படுக்க வா என்று கூறினார். மேலும் என்னை பார்த்து தேவிடியா, சுன்னி என்று கெட்டவார்த்தையால் பேசினார். (சாட்சி அழுதுகொண்டே கூறினார்.) யாரும் பக்கத்தில் இல்லை என்ற காரணத்தினால் வீட்டில் இருந்து நான் வெளியே நடுத்தெருவிற்கு ஓடிவிட்டேன்.

3. பின்னர் 12.00 மணிக்கு வீட்டிற்கு வந்த எனது மகன் சிவாவிடமும், எனது மருமகன் கண்ணனிடமும் நடந்த விவரத்தை கூறினேன். பின்னர் நடந்த சம்பவத்திற்கு மறுநாள் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். நான் அளித்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள மாலதி என்ற கையொப்பம் என்னுடையது தான். (**<u>புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>.**) இன்றளவும் நான் வெளியே சென்றால் எதிரி எதாவது செய்துவிடுவார் என்ற பயத்தில் தான் சென்று வருகிறேன். நடந்த சம்பவத்திற்கு போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

4. எங்கள் ஊரில் இருந்து வெம்பக்கோட்டை காவல் நிலையம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. என்னுடைய மகனும் மருமகனும் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நாளில் என்னுடைய வீட்டிற்கு வந்த பிறகு வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு போன் பண்ணி தகவல் கூறினார் என்றால் சரிதான். உடனே இரவு நேரத்திலேயே போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் என்னிடம் இரவே விசாரித்தார்கள் என்றால் சரிதான், காலையில் காவல் நிலையம் வந்து புகார் கொடுக்குமாறு கூறினார்கள்.

5. நாங்கள் காலையில் காவல் நிலையத்திற்கு செல்லும் போது சுமார் 7:00 மணி இருக்கும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு நானும் என்னுடைய மருமகனும் மட்டும் சென்றோம். என்னுடைய மருமகன் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருக்கு எழுதப் படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னுடைய மருமகன் தான் இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினார் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த தேதியில் காலை 08.00 மணிக்கு வீட்டுக்கு வந்து விட்டேன் என்றால் மதியம் 02.00 மணி ஆகிவிட்டது.

6. அ.சா.ஆ.1 புகார் என்னால் இந்த வழக்கில் கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி பால்பாண்டி அண்ணா காலனியில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். நான் வேறு சமூகம் என்றாலும், எதிரி வேறு சமூகம் என்றாலும் சரிதான். மாரியம்மன் கோவில் தெருவில் என்னுடைய சமூகத்தினர் சுமார் 300 குடும்பம் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் தெருவில் இருந்து அண்ணா காலனி சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். அண்ணா காலனி முழுவதும் ஆதிதிராவிட சமூகத்தை சார்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த காலனியில் உள்ள மக்களுக்கு பொருட்கள் வாங்க அங்கேயே கடை இருக்கிறது என்றாலும் எங்களுடைய தெருவிற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் எதிரி எங்கள் தெருவிற்கு வருவார்.

7. நான் பயர் ஆபீஸில் வேலை செய்வதால் காலை 07.00 மணிக்கு சென்று விட்டு இரவு எட்டு மணிக்கு வருவேன் என்றால் மாலை 05.00 மணிக்கு வந்து விடுவேன். நான் பொதுவாக இரவு 09.00 மணிக்கு தூங்கி விடுவேன் என்றால் 10.00 மணிக்குள் தூங்குவேன். வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதியில் நான் யாரிடம் போனில் பேசிக் கொண்டிருந்தேன் என்றால் என்னுடைய மகளிடம் போனில் பேசிக் கொண்டிருந்தேன். நான் இந்த வழக்கில் கூறும் சம்பவம் என்னுடைய மகளிடம் செல்போனில் பேசிக் கொண்டிருந்தபோதே நடைபெற்றதா என்றால் ஆம். இந்த வழக்கு சம்பவத்தை நான் என்னுடைய மகளிடம் உடனடியாக கூறினேன் என்றால் சரிதான். என்னை பார்க்க என்னுடைய மகள் எப்பொழுது வந்தார் என்றால் என்னுடைய மகள் என்னுடைய அம்மாவுடன் மருத்துவமனையில் இருந்தார், என்னுடைய மருமகன் தான் என்னை பார்க்க வந்தார்.

8. எதிரி என்னுடைய கையைப் பிடித்து இழுத்ததாக கூறும் சம்பவம் நான் கூறினால் என்னுடைய மகன் மற்றும் மருமகனுக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி என்னுடைய கையைப் பிடித்ததாக கூறும் நேரத்தில் நான் சத்தம் போட்டேனா என்றால் சத்தம் போட்டேன். எங்களுடைய வீட்டிற்கு அருகே எங்களின் உறவினர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய சத்தம் கேட்டு என்னுடைய உறவினர்கள் சுமார் 20 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் என்னை காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்று அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள். அவ்வாறு வந்த நபர்களின் பெயர்களை என்னால் சொல்ல முடியுமா என்றால் சுப்பிரமணி, காந்திமதி உட்பட பல நபர்கள் வந்தார்கள். அப்பொழுது எங்கள் தெருவை அங்கு கூடிவிட்டதா என்றால் ஆம். அந்த கூட்டம் கலைவதற்கு முன்பாகவே போலீசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். கூட்டம் கலைந்து, போலீசார் அங்கு இருந்து செல்ல இரவு 01.00 ஆகியிருக்குமா என்றால் ஆகியிருக்கும்.

9. நானும் எதிரியும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்த நபர்கள் என்பதால் வேறு பிரச்சனை எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக போலீசார் அங்கு காவலுக்கு இருந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் என்னுடைய கணவரிடம் கூறினேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பவம் என்னுடைய கணவருக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் அவர் கேரளாவில் இருந்து ஊருக்கு மூன்று மாதம் கழித்து வந்த பிறகு தான் தெரிய வந்தது. எனக்கும் எதிரிக்கும் பழக்கம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

10. எங்கள் ஊரில் ஊராட்சி தேர்தல் நடைபெற்ற போது சுந்தரவல்லி என்பவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்றால் சரிதான். அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். அவரை எதிர்த்து பத்மாவதி என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். பத்மாவதி எங்கள் சமூகத்தை சார்ந்த நபர் என்றால் சரிதான். எதிரி என்னுடைய கையை பிடித்து இழுக்கவில்லை என்றாலும், கெட்ட வார்த்தை பேசி ஏசவில்லை என்றாலும், காசு தருகிறேன் என்னுடன் படுக்கவா என்று கூறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி எங்கள் ஊராட்சி தேர்தலில் பத்மாவதிக்கு ஆதரவாக செயல்பட்டதால் நான் சுந்தரவள்ளியின் தூண்டுதலின் பேரில் எதிரி மீது இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணை செய்த போதும், என்னுடைய புகாரிலும் வழக்கு சம்பவத்தின் போது நான் என்னுடைய மகளுடன் போனில் பேசிக் கொண்டிருந்தேன் என்ற விபரத்தை கூறினேனா என்றால் கூறினேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 4, 2025 4:30 PM

Judicial Magistrate 2, Sattur